**O.S. 157/2021**

Date : 15.02.2023

வா.சா.1 : சாமுவேல்

வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

வழக்கு சொத்தின் நான்கு பக்க எல்கைகளை வழக்கில் சொல்லாதததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் நியாபகமில்லை. தாவா சொத்திற்கு எனது உரிமையை காண்பிப்பதற்கு உரிமை ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. நான் சொல்லக்கூடிய ஆவணங்கள் என் பெயரில் உள்ளதா என்றால் பட்டா உள்ளது- தாவா சொத்தை உட்படுத்தி யாருக்காவது அடமான ஒத்தி வைத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து ஒரு பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் பட்டாவில் சொல்லப்பட்டுள்ள பாக்கியமுத்து நாடார் குமாரர் தேவஇரக்கம் யார் என்றால் எங்க ஊர் ஆள்தான். தேவஇரக்கதிற்கு தாவா சொத்தில் உரிமை உள்ளதா என்றால் இல்லை. வழக்கின் 2 முதல் 4 பிரதிவாதிகள் தாவாசொத்துக்கு தங்களது பெயரில் பட்டா கொடுக்கவேண்டும் என்று தாசில்தாரிடம் மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த மனுவை விசாரித்த தாசில்தார் அவர்களது பெயரில் பட்டா கொடுக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார் என்றால் கூட்டுப்பட்டா கொடுத்துள்ளார்கள். பட்டாவை எதிர்த்து சேரன்மகாதேவி துணை ஆட்சியரிடம் மேல் முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தாசில்தார் அலுவலகத்தில் தேவஇரக்கத்தின் வாரிசுகள் ஆஜர் ஆகி வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். தேவஇரக்கத்தின் வாரிசுகள் தகப்பனார் பெயர் தவறுதலாக பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி சொத்தில் தங்களுக்கு யாதொரு உரிமையும் இல்லை என்று எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். தங்கசாமி பெயரில்தான் பட்டா ஏற்பட்டிருக்க வேண்டும் என்று விசாரணையில் குறிப்பிட்டார்கள் என்றால் அது தவறு. நான் தொடுத்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன மறுப்பு தெரிவித்துள்ளார்கள் என்று நான் படித்து பார்க்கவில்லை. தாவா சொத்தை பொறுத்து தங்கசாமி பெயரில் 19.12.1979 கிரைய ஆவணம் உள்ளதா என்றால் 383/6 ல் 25 செண்ட் வாங்கியுள்ளார்கள். 383/6C என்னுடைய 45 செண்ட்

இடமாகும். சர்வே எண் 383/6 ன் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 34 செண்ட் என்றால் சரிதான். சர்வே எண் 383/6 எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்று எனக்கு நியாபகமில்லை. சர்வே எண் 383/6C க்கு முதன் முதலில் எப்போது பட்டா ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு நினைவில்லை. சர்வே எண் 383/6 எத்தனை உட்பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் தங்கசாமியை எனக்கு தெரியும். தங்கசாமி என்பர் சர்வே எண் 383/6 ல் கண்ட 2 ஏக்கர் 34 செண்ட்டில் 25 செண்டை அனுபவித்து வந்தார் என்றால் அனுபவிக்கவில்லை. சர்வே எண் 383/6 ல் தங்கசாமிக்கு ஏதாவது உரிமை இருக்கிறதா என்றால் சர்வே எண் 383/6 ல் இருந்தாலும் இருக்கலாம் சர்வே எண் 383/6 C ல் இல்லை. சர்வே எண் 383/6 ல் நான் எவ்வளவு உரிமை கோருகிறேன் என்றால் 45 செண்டிற்கு நான் உரிமை கோருகிறேன். 45 செண்ட் போக மீதம் உள்ள இடம் யார் யாருக்கு சொந்தம் என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 383/6C ல் கண்ட 45 செண்ட் எனக்கு பாத்தியப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பட்டாவின் அடிப்படையில் தாக்கல் செய்திருக்கும் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்காமல் பிரதிவாதிகள் பெயரில் இருக்கும் ஆவணங்கள் மட்டும் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கேட்டிருப்பது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சர்வே எண் 383/6C ல் கண்ட 25 செண்டை 1ம் பிரதிவாதி தகப்பனார் தங்கசாமி என்பவர் 19.12.1979 ல் கிரையம் பெற்று அவர் அனுபவம் செய்து வந்து 1ம் பிரதிவாதிக்கு வாரிசு முறையில் கிடைக்கப்பெற்று அவர் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பாக்கியராஜ் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க முழு உரிமை உண்டு என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்போது 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்கள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் ச ரியல்ல. தாவா சொத்தில் உரிமையும் அனுபவமும் இல்லாத காரணத்தினால் இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.